# மாதர் மனோரஞ்சினி.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.—ஔவையார்

| VOL. 3. | MADRAS: MAY 1901. | No. 3. |
|---|---|---|
| புத்த. ௩. | சென்னப்பட்டணம் 1901௵ மே௴ | இல. ௩. |


## திருவள்ளுவநாயனார் மனைவியாராகிய *வாசுகியம்மாளின் சரித்திரம்.

வாசுகியம்மாள் நித்தியாநந்த மோட்சத்தில் சென்று சேர்ந்தபொழுது, நாயனார், மனைவியாரின் பிரிவாற்றாமையால் வருந்தித் தமது கருத்தைப் பின்வரும் செய்யுளால் வெளிப்படுத்தியருளினார்.

"அடிசிற்கினியாளே யன்புடையாளே
படிசொற்றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்றூங்குமென் கண்ணிரா" என்பதுவே அதுவாம்.

"அடிசிற்கு இனியாளே!" என்றது வாசுகியம்மாள் கணவர் கொடுத்த மணலை அன்னமாக்கிப்படைத்த கற்புடைமையைப் புகழ்ந்து கூறப்பட்டது என்பர்; அன்றியும், தனக்குத் தலைவரும் தெய்வமுமாகிய கணவரது சுகதுக்கங்களை தன்னுடைய சுகதுக்கங்களாக எண்ணும் கற்பிற் சிறந்த அற்புதகுணபூஷணாலங்காரம் அமைந்த பொற்கொடிமகளிர், தாங்கள் ஏழைகளாயிருந்தாலும் கிடைத்ததைக்கொண்டு வாய்க்கு இனிமையாயிருக்கும்படி சமைத்துக் கணவரது பசிவேளையறிந்து, அவருடைய வயிற்றினளவுதெரிந்து அன்னம்படைத்து, பக்கத்திலிருந்து இலையைப்பார்த்து வேண்டியதைத் தாமேயறிந்துகொடுத்து உபசரித்து, இனியவசனங்கூறி அவரையுண்பித்து மனமகிழ்ச்சியடையும் இயல்புள்ளவர்களாகையால் வாசுகியம்மாள் அப்படியே தம்மைப் போஷித்துவந்த அருமையை நினைந்து வருந்தினர் என்பது மாகும். "அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட, மறுசிகை நீக்கியுண்டாரும்" என்ற முன்னோர்வசனத்தாலும் மேலே காட்டிய நியாயம் பொருந்துவதையும் கண்டுகொள்ளலாம். சமயம் அறிந்து இல்லறத்திற்கு வேண்டியபொருள்களை ஆராய்ந்து சேகரித்துக்கொண்டு வீண்செலவு செய்யாமலும், கணவரது வரவையும், கால இயல்பையும் அறிந்து அவர்மனம் நோகாதபடி செலவுசெய்து போஷித்துவருகிற கற்

* இதன் முன்தொடர்ச்சி, புத்தகம் I. 131-வது பக்கத்தில் காண்க.

புடைமாதரிலக்கணமும் இவ்வாக்கியத்திலமைந்த பொருளாகக்கொள்ளலாம். "இல்லறத்திற்கியைவனவிட்டுவார், அல்ல செய்துதேவறிதினழித்திடார், புல்லு காதலராயுட்பொலிவுற, மல்லலோங்கணிமஞ்சளணிவரால்" என்ற பிரமாணவசனத்தாலும் அப்பொருள் அமைவது காணலாம். இதனால் வாசுகியம்மாள் கணவர் வருந்தாதபடி சமயமறிந்துவேண்டிய பொருளைச் சேகரித்துக்கொண்டு, வீண்செலவு செய்யாமல் நாயனாரைக் காப்பாற்றிவந்த அரியகுணம் வெளியிடப்பட்டது.

"அன்புடையாளே" கற்புடைமாதர் கணவரிடம் செலுத்தும் அன்பு இருவகைப்படும். தாய் தன் குழந்தையைப் பாதுகாப்பதில் தோன்றுவதுபோன்ற அன்பு ஒன்று. மோட்சத்தை விரும்புகிறவர்கள் தெய்வத்தினிடம் செலுத்துவதுபோன்ற அன்பு ஒன்று. தாய்போன்ற அன்பு கணவருக்கு அன்னபானாதிகளூட்டிச் சரீரபோஷணை செய்யும்பொழுது உண்டாவது. மற்றொன்று எப்பொழுதும் கற்பினர் இருதயத்தில் கணவர் நீங்காதிருப்பது. "கொழுநன் சொற்கடவாதுறை கொள்கையே, வழுவினல்லறம் வான்றவ மாற்றுதல், தொழுது தெய்வம்பாய்மலர்தூவுதல், பழுதில் கற்புடைப் பத்தினிக்கென்பவே" "வாள்விழிக் குலமங்கையரன்பர்பொற், றுள்விளக்கிய தண்புனல் கங்கையக், கேள்வரேகிளர் தேவர்கண்மூவரில், ஆளுமெய்ம்மையடிகளென் றெண்ணுவார்." என்ற செய்யுள்களால் கணவரையே தெய்வமாக வழிபடும் பக்தியாகிய அன்பும், முன்னேகூறிய "அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட" என்றதனால் தாய்போன்ற அன்பும் பெறப்படுவது அறியலாம். இவ்விருவகையன்பும் நிரம்பப்பெற்றுத் தன் கணவரைக்காத்த வாசுகியம்மாளின் பெருமை கூறப்பட்டது. "படிசொல் தவறாதபாவாய்" தான் தெய்வமாகக்கொண்ட கணவருடையவாக்கியம் எதுவாயிருந்தாலும் அதுவே தனக்கு உபதேசமொழியாகக்கொண்டு, அதற்கு மாறுபடாது நடந்து, அதனைப் பரிபாலிப்பதையன்றிக் கற்புடைமாதர்க்கு வேறு மந்திரோபதேசங்கள் கிடையாமையால் தம் கணவர் மொழிகடவாது நடப்பதே தங்களுக்குப் பெருந்தவமென்று கருதி அவ்வாறு நடப்பதே பதிவிரதாசிரோமணிகளின் அரிய செய்கையாம். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" "மேவுகாதலருள்ளம் விழைந்தன, ஏவுமுன்னர் குறிப்பினியற்றுவார்" "மையில் காதலர் வந்தெவையாயினும், செய்திரென்றலுஞ் செய்தன்மென்பரால்" என்ற பிரமாணவசனங்களாலும் முன்னேகூறிய "கொழுநன் சொற்கடவாதுறைகொள்கையே, பழுதினல்லறம்" என்றதனாலும் காணலாம். இந்தச் சிறந்த குணத்தை ஆபரணமாகக்கொண்டிருந்த வாசுகியம்மாளுடைய பெருமை இவ்வாக்கியத்தால் இனிது விளக்கப்பட்டது, "அடிவருடி"

பகற்பொழுதில் பலவகையான வேலைகளைச்செய்தும், குடும்ப போஷணைக்காக அலைந்து திரிந்தும் வருந்திய கணவருக்குச் சரீராரோக்கியம் உண்டாவதற்கு இரவில் நல்ல நித்திரையே சிறந்த சாதனமாக இருப்பதால் அந்த நித்திரை ஆகாராதிகளைவிட மிகவும் முக்கியமானது. சுகமான நித்திரையுண்டாகச் செய்வதும் கற்புடைமாதர்க்குப் பெரியதாகிய ஒரு காரியமாகும். ஆகையால் தாயானவள் நித்திரை பிடியாமலிருக்கிற இளங்குழந்தைகளைத் தட்டித்தூங்கச் செய்வதுபோல மனைவியானவள் தன் கணவரது பாதங்களை உள்ளன்போடு தனது மலர்போன்ற மெல்லியகைகளால் தடவிக்கொடுப்பதனுல் சீக்கிரத்தில் நல்ல நித்திரை உண்டாமென்கிற விருப்பத்தினுல் அவருடைய பாதங்களைத் தடவிக்கொண்டிருந்து தூங்கப்பண்ணுவது கற்புடை மாதரிலக்கணத்தில் சிறந்தது ஒன்ருகும். இதுவும் தாய் அன்புபோன்ற அன்பேயாம். அன்றியும் தெய்வத்தினிடம் பக்தி செலுத்துகிறவர்கள் தாம் ஆராதிக்கிற திவ்யவிக்கிரக சொரூபத்தைச் சதாசிந்தையில் தியானித்துக் கொண்டிருந்து அத்திருவுருவத்தைத் தமது கைகளால் பரிசித்து ஆநந்தமடைவதற்குப் பூசாகாலத்தை யெதிர்நோக்கியிருந்து அக்காலம் வந்தவுடனே வெகு ஆவலாக அதனைத்தொட்டு மகிழ்வது போல்வதாகிய தெய்வபக்திபோல்வதே என்பதும் நியாயமாகும். ஏனென்ருல் "தெய்வந்தொழாஅள் கொழுநற்றெழுதெழுவாள்" என்றகற்பிலக்கணம் பொருந்திய பெண்கள், தாங்கள் துயில் நீங்கி எழுந்திருந்தது முதல் கிருகசுத்தி, பாத்திரசுத்தி, சமையல்செய்தல், வைதிக கருமங்களுக்குபசரித்தல், தேவராதனைக்குச் சகாயஞ் செய்தல, கணவனைப் போஷித்தல், தன்னைப்பாதுகாத்தல், மற்றுமுள்ள குடும்ப சம்ரட்சணை, கணவரிடத்து சாஸ்திரோபதேசங்கேட்டல் முதலிய செய்கைகளால் தமது வழிபடு தெய்வமாகிய நாயகர் திருமேனியைத் தொட்டு மகிழ்தற்குப் பகற் பொழுதில் சாவகாசம் கிடைப்பது அரிது; கிடைப்பினும் கணவருடைய விருப்பத்தாலன்றி அவருடைய சரீரத்தைத் தொடுதல் கூடாதென்கிற சாஸ்திரத்தடையும் உண்டு. இரவில் நித்திரைக்குப் போகுங்காலத்தில் அந்த நிர்ப்பந்தங்கள் ஒன்றுமில்லாமையால் தன் கணவரது சரீரத்தைப் பரிசித்து ஆநந்தமடைவதற்கு அது நல்லகாலமாகையால் அக்காலத்தில் அவரது பாதங்களைத் தடவிக்கொடுப்பதில் பதிவிரதைகளுக்குப் பேரானந்தம் விளையும். ஆதலால் அது தெய்வத்தினிடம் செலுத்தும் அன்பிலடங்குவதும் காணலாம். அக்குணம் சிறந்து விளங்கிய அம்மையாரின் பெருந்தன்மை இதனுல் பிரகாசிப்பிக்கப்பட்டது. இந்த அரிய குணத்தை வியந்தே நாயனுரும் "என்றாங்கு மென் கண்ணிரா" என்றுகூறிப் புலம்பினுரென்று கொள்ளலாம். நாயனுர் இர

வில் நன்றாய்த்தூங்குவதற்கும் "வாசுகியம்மாள்" செய்கையே காரணமாயிருந்ததென்பது இனிது விளங்குதல் காணலாம்.

"பின்றூங்கி முன்னெழுந்த பேதையே" என்றது "கொழுநனுண்டபின்றூனுகர்கொள்கையும், விழிதுயின்ற பின்றுஞ்சலுமென்றுயில், எழுதல் முன்னமெழுதலுமேயன்றே, பழுதில் கற்புடைப்பாவையர் செய்கையே" அன்பர் துஞ்சிடிற்றுஞ்சுதலாங்கவர், துன்பமெய்திடிற்றுமத்துன்புறல், இன்பமுற்றிடின் புற்றிருத்தலே, மன்பெருந்தவங் கற்புடைமாதர்க்கே" என்ற பிரமாண வாசகங்களுக்கு இலக்கியமாக எழுந்தது. இச்செய்கை மிகச் சிறந்தது, இச்சமையமே கற்புடைமாதர்க்குத் தெய்வபக்திக்கிலக்கணமாகிய ஆனந்தம் நிரம்பப்பெறுவது. ஏனென்றால் முன்னே குறித்த கிரகசுத்தி முதலாகிய பலவேலைகளினால் தடைபட்டுத் தன் தெய்வமாகிய கணவரை யாராதிக்கும் ஆனந்தத்திற்குப் பல இடையூறுகள் உண்டாகும். இப்பொழுதிலோ சகல குடும்பவேலைகளும் முற்றுப்பெற்றுக்கரசரணாதி அவயவங்களும், மனமாதி அறிகருவிகளும், ஞானேந்திரியங்களும் ஒழிவு பெற்றிருப்பதனால் அவ்வெல்லாவற்றாலும் தன் வழிபடு கடவுளைப் பக்தி செய்து பஞ்சேந்திரியங்களும் ஏககாலத்திலானந்தம் அடையக்கூடிய காலமாக விருக்கிறது. எப்படியென்றால் தன் கரசரணாதி அவயவங்களெல்லாம் அவருடைய சரீரத்தைப் பரிசித்துச் செய்கிறதாகிய தேவாராதனையில் பொருந்தி ஆனந்தமடைகின்றன. இது சரீரானந்தம். காதுகள் அவர் பேசுகிற இன்பமான மதுரவசனங்களைக்கேட்டு ஆனந்தமடைகின்றன. இது சுரோத்திரானந்தம் கண்கள் அவருடைய உருவத்தைத் தடையறப்பார்த்து மகிழ்கின்றன. இது நேத்திரானந்தம். மூக்கானது அவருடைய சரீரத்திலிருந்துண்டாகும் நறுமணத்தைக்கவர்ந்து திருப்தியடைகின்றது. (இந்த மணம் இக்கலிகாலத்தில் சிலமாதர்க்கு அருவருப்பைத்தருவதாக இருந்தாலும் கற்புடைமை தவறாத பொற்புடைய மாதர்க்கு இன்பமே தருவதாகும்) இது நாசிகானந்தம். அவரிடத்தில் உண்மைவசனங்களை மதுரமாகப் பேசுவது வாக்கானந்தம். இவ்வகையாகச்சகல கருவிகரணங்களும் ஒன்று கூடி ஆராதனை செய்து ஆனந்தமுறுங்காலமாதலால் இப்பணிவிடை மற்றவை யெல்லாவற்றையும் விட மிகச்சிறந்தது என்று சொல்லப்பட்டது. கணவர் துயில்வதன் முன் தான் துயின்றால் இப்படி அருமையான பணிவிடையாகிய தேவாராதனைப்பயனையிழந்துவிடநேரிடுமென்கிற காரணத்தாலும், கணவர் விழித்திருக்கையில் தான் தூங்கினால் ஒருக்கால் அவருக்கு நல்ல நித்திரையில்லாவிட்டால் அவருடைய சரீராரோக்கியம் குறைவுபடுமே யென்ற

அச்சத்தாலும் கற்புறுசிந்தை மாதர்கணவர் துயிலுமுன் தூங்காதிருப்பது சிறந்த நியாயமாயிற்று. பகற் காலத்தை விட இராக்காலத்தில் செய்யப்படும் தேவாராதனையே ஆடவர்க்கும் சிறந்ததென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. பகற் பொழுதிலும் சாயங்காலத்தும், முன்னிரவிலும் ஆலயஞ்சென்று தெய்வதரிசனம் செய்வதைவிட அர்த்தஜாமத்தில் தரிசிப்பது அநந்தமான பலன் தரும் என்று சிவாலயதரிசன விதி கூறுகின்றது ஆதலால், இந்தப்பணிவிடை மாதர்க்கு மிகச் சிறப்பைத்தருவது என்று கருதவேண்டும். இந்தச்செய்கை வாசுகியம்மாள் இடம் சிறந்திருந்ததென்பதைப் "பின்றூங்கி" என்ற தொடர்மொழி விளக்கியது. இவ்வாறு பணிவிடைசெய்து கணவர் தூங்கினபின் அவரையே தியானித்துக்கொண்டு தூங்குகின்ற தெய்வத்தன்மையுள்ள பெண்களுக்கு மறுநாள் அவர் பணிவிடைகளைத் தடைபடாமல் செய்யவேண்டியது அவசியமாகையால் அவர் நித்திரை தெளிந்து எழுந்திருப்பதற்கு முன்னமே தான் துயில் நீங்கி எழுந்திருப்பது முக்கிய இலக்கணமாயிற்று. இந்த அருமையான செய்கையையே "தெய்வந்தொழாஅள்கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப் பெய்யுமழை" என்ற தெய்வவாக்கு வியந்துகூறி, அவள் பெய் என்று சொல்வதன்முன் மழை பெய்யும் என்று பயனும் உடன் கூறியது ; மழை பெய்யுமென அப்புபூதத்தின் மேல்வைத்துக் கூறியிருப்பினும் "ஒருமொழியொழிதன்னினங் கொளற்குரித்தே" என்றதனுல் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்கிற பஞ்ச பூதங்களும் அவள் ஏவிய ஏவல்செய்துகொண்டிருக்கும் என்று கொள்க. பஞ்ச பூத அதிஷ்டான தேவதைகளாகிய பிரமா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் ஆகிய தேவர்களும், மற்றையதேவரும் அவள் மனக்குறிப்பின் வழிநிற்பார்கள் என்றும் கொள்ளலாம்.

இதனுல் இதுவரைக்கும் கூறிவந்த சகல கற்பிலக்கணங்களும் நிறையப்பெற்று மகிமைவாய்ந்த வாசுகியம்மாளுடைய கற்புடைமையை அந்த அம்மாளுடைய கணவராகிய நாயனர் உலகத்திலுள்ள மற்றப் பெண்களும் கைக்கொண்டு மோட்சானந்தமாகிற பெரும்பயனைப்பெற்று உய்யும்பொருட்டு இச்சிறிய செய்யுளில் அடக்கிக்கூறி அந்த அம்மாளுக்காகப் புலம்பினரென்று கொள்ளலாம்.

இந்தவிதமாகக் கூறப்பட்ட கற்பிலக்கணங்களெல்லாம் நிறைந்திருக்கும் மங்கையர் மகிமையை அளவிட்டுச்சொல்ல ஒருவராலும் முடியாது. ஆயினும் கொஞ்சம் எழுதுகிறேம். "நண்ணுகற்புடை நங்கையர் சீறடி, மண்ணினெவ்விடந்தோயினுமற்றஃ, தெண்ணுகின்ற தவங்களெவற்றினும்,

புண்ணியத்திலமென்று புகல்வரால்'' இதன் பொருள் நிலைபெற்ற கற்பினை யுடைய மாதரது சிறிய திருவடிகள் எந்தவகையான 'பூமியில் பட்டா லும் அந்தப்பூமியானது, புண்ணிய பூமியாக மதிக்கப்படுகிற எல்லா க்ஷேத்திரங்களையும்விட அதிகமாகச் சிறந்த புண்ணிய க்ஷேத்திரமென்று பெரியோர் சொல்வார்கள் என்பதாம். "கற்றவர்க்கு நலனிறைந்த கன்னியர்க்கும், சாதியொன்று நன்மை தீமையில்லையால்'' என்றதனால் கற்புடை மாதர் ஜாதிபேதம் எண்ணாமல் எல்லாராலும் வணங்கப்படவேண்டும் என்று ஏற்பட்டது. மாதர் கால்பட்ட இடத்தையே மகாபாதகங்களை நீக்குகிற புண்ணிய க்ஷேத்திரமாகச் செய்யக்கூடிய "கற்புடைமை'' எவ்வளவு சிறப்பு பொருந்தியது? அதனையுடைய பெண்களின் பெருமை அளவிலடங்குமா? ஜாதிபேதம் கூட அவர்களுக்கு இல்லையென்றால் அவர்களே தெய்வம் என்பதில் சந்தேகமுண்டோ? மானிடப் பெண்களை தெய்வத்தன்மையுடையவர்களாக்கி எல்லாராலும் வணங்கச் செய்கிறதும், முடிவில்லாத மோட்சானந்தம் தருவதும், இகத்தில் உலகமெங்கும் புகழ்ச்செய்வதுமாகிய "கற்புடைமை'' என்கிற அரிய பெரிய செல்வத்தை, அநந்தகாலஞ்செய்த தமது தபோமகிமையால் கண்டு எடுத்துரைத்த நமது ஆரியப்பெரியாருடைய பெருங்கருணைக்கு வியந்து, அவர்களை நமது குல தெய்வமென்று கொண்டாடாமல் இகழ்வது எவ்வளவு கொடுமை பாருங்கள்! இந்தப் பெரிய செல்வத்தை யாதொரு பிரயாசமும், முயற்சியுமில்லாமல் எளிதில் அடையக்கூடியதாயிருக்கக் கையிலிருக்கும் ஆகாய கங்கா ஜலத்தையிகழ்ந்து கொட்டிவிட்டு உப்பந் தண்ணீருக்காக ஓடித்திரிவதுபோல வேறுவகையான முயற்சியிலிருப்பது எவ்வளவு பேதைமையாமென்று கவனித்துப்பாருங்கள். ஆ! என தன்புக்குரிய ஆரியகுலதிலகமாகவிளங்கும் சகோதரிகளே! அருமையான பலனைக் கொடுப்பதும் அடைவதற்கு எளியதுமான "கற்புடைமை'' யின் மகிமைப் பிரபாவங்களை யெல்லாம் நமது பெரியோர்களிடம் கேட்டுத்தெளிந்து அதனைக் கைப்பற்றிக்கொண்டு நடந்தால் உங்களுக்கொரு போதுங் குறைவுவாராதாகையால் நீங்களெல்லாரும் ஆரியகுலதனமாகிய பெரிய "கற்புடைமையை'' உடையவர்களாய்ச் சொர்க்கமத்திய பாதாளமென்கிறமூன்றுலோகங்களிலும்உங்களது கீர்த்தி பிரகாசிக்கமகிமையோடு நீடூழிவாழ்ந்துகளித்திருக்க உள்ளன்போடு முயற்சிசெய்து வாழ்ந்திருப்பீர்களாக.

கற்பெனப்படுதல் சொற்றிறம்பாமை காண்கெனு
மௌவை தன்வாக்கை

நற்கலனெனவே பூண்டுதென் பதிக்கு நாடோறும்
பணிகள் நன்கியற்றிச்
சொற்பொருடெரியா வொருபணிப்பொருளைச்
சொல்லென முகதெரி சனத்தால்
கற்பினை நிறுத்திக் கேட்டரனடிக்கீழ்க்
கலந்த வென்னம்மைசாள் போற்றி.

(முற்றிறறு) அம்மாக்கண்ணு அம்மாள்.

---

## மாயாபுரி விநோதக் கதை.

33-வது பக்கத்தொடர்ச்சி.

மறுநாள் பகலில் தேவாராதனை முடித்துப்போஜனம் உண்டானபின் ஜகதீசன் தன்மனைவியோடு சிறிதுநேரம் விளையாட்டாகப்பேசிக்கொண்டிருந்து அவளிடம் செலவுபெற்றுக்கொண்டு புறப்பட்டு கருநாடகதேசம்போனான். அதன் தலைமைநகரமாகிய் மார்த்தாண்டபுரம் போய்ச் சேர்ந்து அங்குள்ள வளப்பங்களைக்கண்டு களித்துப் பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுக் கீழ்திசைநோக்கி ஒரு கூப்பிடுதூரம்போய் அங்கேகாணப்பட்ட ஒரு உப்பரிகையின் கிட்டப்போய், இது என்ன அற்புதமாயிருக்கிறது ? நாலுபுறத்திலும் வாயில் இல்லை. இதுதான் அந்தப்பெண் இருக்கும் சிறைச்சாலையாக விருக்குமோ என்னவோ ? தெரியவில்லை. இதன் உண்மையை அறிந்துகொள்வோமென்று உருமறைந்து நாலுபுறமுஞ் சுற்றிப்பார்த்துத் தென்புறச்சுவரில் ஒரு சாலகப்புரை இருக்கக்கண்டு அதன் அருகிற்போய் நின்றான். அப்பொழுது உள்ளுக்குள்ளிருந்து மிருதுவான ஒரு தொனி வெளிப்பட்டது. அதென்னவெனில் ஆ! தெய்வமே! நான் செய்த தப்பிதந்தான் என்ன ? எதற்காக எனக்கு இந்தத் தெண்டனைவிதித்தாய் ? சூரியன் ஒளியையாவது, என் தோழிமார் முகத்தையாவது, மற்ற மனிதர் முகத்தையாவது பார்த்துக்களியாமல் ஒன்றரைவருஷங் கழிந்துபோய்விட்டது. நானிப்பொழுது இருக்கும் நிலைமைக்கும் தாயின் கர்ப்பாசயவாசத்துக்கும் யாதொருபேதமுமில்லை. ஆனல் கர்ப்பவாசத்திலிருந்தபொழுது இந்த துக்கமும் துன்பமுமிருந்திரா ; ஏனென்றால் அப்பொழுது அறிவதற்குரிய கருவிகரணங்கள் தத்தம்தொழில்செய்யும் சக்தி குறைந்திருந்தபடியாலேதான். இந்தச் சிறையோ அதனிலும் பதினாயிரம்பங்கு கொடியது. பொறிபுலனாதிகருவிகள் நன்கு அமையப்பெற்ற இக்காலத்தில் எனக்கு இந்தச்சிறை எவ்வளவு துயரந்தரும் என்பது என் தெய்வமே யுமது திருவுளமுணராதிராது. நாஸ்திக சகவாசம் கூடாதென்று வெறுத்தொதுக்கி, உமது திருவருளைச் சிந்தித்துக்கொண்டிருப்பதற்காகவோ என்னை யிப்படிப்பட்ட சிறையிலிட்டு வருத்துகின்றீர் ? ஒவ்வொரு நிமிஷமும் பலயுகங்

களாகத் தோற்றுகின்றன. இந்த ஒன்றரை வருஷமும் அன்னபானாதிகளையும்வெறுத்து உமதுதிருவடியைச் சிந்தித்துக்கொண்டு கொடுந்தவஞ் செய்தும் பயனில்லாமற்போயிற்று. இனி மீட்சியுண்டாமென்னும் நம்பிக்கையில்லை. உயிர்துறப்போமென்றாலும் முடியவில்லை. தெய்வமில்லையென்று கருதிக்கவலையற்றிருக்கவும் மனம் ஒருப்படவில்லை. யாதுசெய்வது? அன்னியர்செய்யுந் துன்பத்தை விலக்கிக்காப்பவர் தந்தை தாயாகும். அவரால் நேரிடும் துன்பத்தை அரசனே கவனிக்கவேண்டும். அரசனால் நேரிடும் துன்பத்தைத் தெய்வந்தான் விலக்கிக்காக்கவேண்டும். தெய்வமே நடுநிலை நீக்கிக்கொடுமை செய்தால் கேட்பவரார்? சர்வேசுவரா? பக்தரட்சகா! அகிலேசா! இனித் துன்பந்தாங்க ஒண்ணாது. எப்படியுமென்னைக் காத்தருளவேண்டும். இல்லாவிட்டால் பட்டினிகிடந்து பிராணனைவிடுவேன். இன்றுமுதல் ஆகாரத்தைக் கண்ணாற்பார்ப்பதில்லை; என் ஜீவ சரீர ஆத்மாக்களை உன்வசம் ஒப்புவித்துவிட்டேன்; இனிகாத்தாலும் சரி; கைவிட்டாலும் சரி; இந்தப் படுக்கையைவிட்டெழுந்திருப்பதில்லை என்று கூறித்தரையிற் சாய்ந்துவிட்டாள். இவைகளை யெல்லாம் ஜகதீசன் கேட்டு மனம்வருந்தி இது என்ன ஆச்சரியம்! பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை இப்படியும் வருத்துவார்களா? இதுவும் நீதியாகுமா? தன் குழந்தையின் வருத்தம்பாராத அரசன் பிரஜைகளுக்கு நீதி செய்வதெப்படி? அதைப்பற்றிப் பிறகு யோசிப்போம். தெய்வபக்தியிற் சிறந்த பெண்மணியைத் தேற்றவேண்டியது தானிப்பொழுது அவசியமென்று கருதிச்சூட்சும சொரூபங்கொண்டு உள்ளே பிரவேசித்து, அப்பெண்ணரசியின் கண்கள் களிக்கும்படி மன்மதனைப்போல நின்று, அரியதவஞ் செய்து பெரிய நிலைமைபெற்ற கண்மணிப்பாவாய்! இக்கணத்தோடு உன்சிந்தைத்துயரம் ஒழிந்தது; அஞ்சாமலெழுந்திரு என்றான். என்றுங்கேட்டறியாத அமிர்த வசனத்தைக்கேட்ட அந்த மயிலியற்பாவை திடுக்கிட்டு எழுந்திருந்து எதிரேநிற்கும் வடிவழகனைக்கண்களாரக்கண்டு பரவசமடைந்து, தேவர், தானவர், மானிடரில் யாவரோ இவரென்று ஐயுற்று சற்றுநிதானித்து நான் கனவிலேகண்ட திருவுருவமேயிவ்வடிவம்; எப்படியாயினுமாகுக. வந்தவருக்கு மரியாதை செய்யவேண்டுமென்று ஒருபீடமளித்து உட்காரச் செய்து, ஒருபுறமாக ஒதுங்கி நாணிநின்றுகொண்டு, ஈயும், கொசுகும், எறும்பும், காற்றும்புகாது கடுங்காவல்கொண்ட இவ்வறைக்குட்கட்டுக்கடந்து தடையறப்புகுந்த தேவரீர் யாவரோ? யாதுவிரும்பி யிவ்விடம்வந்ததோ? எனக்குச் சொல்லியருளவேண்டுமென்றாள். பெண்ணே! நான் **மாயாபுரி** அரசன்; என்பேர் ஜகதீசன். தேவன்கருணையால் உன்னைச் சிறைமீட்டுக்

கொண்டுபோகவந்தேன். தெய்வத்தைநம்பித் தவம்புரிவோர்க்கொருகுறைவும் நேருகிறதில்லை. நான் ஒரு காரணார்த்தமாக இவ்வழிவருகையிலிந்தத் தாழ்வாரத்தில் சற்று உட்கார்ந்து இளைப்பாறுகையில் நீ பேசிக்கொண்டிருந்த வசனங்களைக்கேட்டு மனம்வருந்தி உனது மனத்துயரை ஒழிக்கவேண்டுமென்று கருதி உள்ளே புகுந்தேன் மற்றொன்றுமில்லை. நீ யார்? உன் பெயரென்ன? நீ இச்சிறையில் இருக்கவேண்டியகாரணமென்ன? சவிஸ்தாரமாகச்சொல்லவேண்டும் என்றான். அந்தப்பெண்ணரசி யுள்ளமகிழ்ந்து, சுவாமீ! நான் இந்த நகரத்தரசன் புத்திரி; என்பெயர் சௌந்தரவல்லி. நாஸ்திகராகிய சக்கிரவர்த்தி குமாரனை மணம்புரிய மாட்டேனென்றதற்காக இக்கொடுந் தண்டனைக்குள்ளானேன். அதுவும் என் தாய்தந்தையர் குற்றமன்று. சக்கிரவர்த்தி கொடியவனாகையால் அவனுக்குப் பயந்து இப்படிச்செய்தார்கள். இந்த நிலைமைக்குவந்து ஒன்றரை வருஷமாயிற்று. உமது திருவுருவத்தை அடிக்கடி கனவில் காண்பதுண்டு. அதனை நனவிலுங்கண்டு களிக்கவேண்டியே கொடுந்தவமிழைத்தேன். என் தவம் பலித்தது; என் கோரிக்கை நிறைவேறிற்று; தெய்வ உண்மை சித்தித்தது; இனிக்கவலைவிண்டேன்; துக்கக்கடலைக் கரைகண்டேன்; என்னுடலையும் உயிரையும் உமக்கே காணிக்கை கொடுத்துவிட்டேன். எனது இருதய தாமரையில் நீங்காதிருக்கும்வள்ளலே என்று திருவடியில்வணங்கின சௌந்தரவல்லியைத் தூக்கியெடுத்துக் கண்ணீர்துடைத்துக் கவலையைமாற்றிச் சித்தசுவாமியை மனதிற்சிந்திக்க அவர் தமதுகூட்டத்தோடும் அங்கேவந்து, அவ்விருவருக்கும் திருமணம் புரிவித்து ஆசீர்வதித்துத் தமதிருப்பிடம் சேர்ந்தார். பின்பு இருவரும் உடலுமுயிரும்போல நேசித்துக்கலந்து விளையாடிக்கொண்டிருக்கையில் ஜகதீசன் பெண்ணே! உனக்கு உண்மை சொல்லுகிறேன் கேள். எனக்கு மங்களாம்பாள் என்று ஒரு மனைவியிருக்கிறாள். அவள் சிறுபெண், அவள் தனித்திருக்க அஞ்சுவாள். இப்பொழுது எழுந்தருளிய சித்தசுவாமியின் ஆக்ஞையினால் உன்னை மணம்புரிந்து சிறைமீட்டுக் கொண்டுபோகவே வந்தேன். வந்த காரியநிறைவேறியது. இன்னும் கொஞ்சகாலம் நீ இங்கேதானிருக்கவேண்டியது. சமையம் பார்த்து உன்னை யழைத்துக்கொண்டு போகிறேன். நான் பக்கத்திலில்லையென்று வருந்தாதே. நீ நினைக்குமுன் வந்துநிற்பேன். உன் பக்கத்திலிருப்பதாகவே நினைத்துக்கொள். மங்களாம்பாளிடம் போய்வருகிறேன். இங்குமங்குமாயிருக்கிறேனென்றுகூறிச் செலவுகேட்க அவள் உள்ளமகிழ்ந்து சுவாமீ! நான்வேறு அவள் வேறென்று நான் நினைக்கவில்லை. உமது சித்தப்பிரகாரம் நடந்துகொள்ளத்தடையேயில்லை. ஆனால் அடிக்கடியெனக்

குத் தரிசனந்தந்தருள வேண்டுகிறேன். எனக்கு வேறுகவலையில்லை. சிறையி லிருப்பதாகவே நான் நினைக்கவேயில்லை என்றுகூற, ஜகதீசன் அவளைத் தழுவி முத்தமிட்டுப் பெண்ணே! அஞ்சாதே! நானுன்னை ஒருபோதும் மறப்ப தில்லை. நான் வந்த சமாசாரம் மங்களாம்பாளுக்குத் தெரியும்; அவள் உன் னைக்குறித்து மெத்த வருந்தியிருக்கிறாள். உன் சமாசாரத்தை அவளுக்குச் சொன்னால் மிகுந்த ஆனந்தப்படுவாள். ஆகையால் அவளுக்கு இங்கே நடந்த விருத்தாந்தங்கூறிக் களிப்பிக்கவேண்டும் என, சௌந்தரவல்லி இந்த முத்துமாலையை அவள் கழுத்திலிட்டு என் வந்தனமும் சொல்லுங் களென்று விடைகொடுத்து மகிழ்ந்திருந்தாள். ஜகதீசன் மாயாபுரிபோய்த் தன்னின்ப நாயகியைக்கண்டு முத்துமாலையை அவள் கழுத்திலிட்டு நடந்த சமாசாரமுங்கூறினன். அவள் கேட்டு பரமானந்தம் அடைந்திருந்தாள். இப்படியாக ஆறுமாதங்கள் சென்றன.

பின்பு ஒரு நாள் ஜகதீசன் மார்த்தாண்டபுரம்போய்ச் சௌந்தரவல்லி யோடு பேசிக்கொண்டிருக்கையில் பெண்ணே! நீ மாயாபுரிக்கு வரவேண் டியகாலம் சமீபித்துவிட்டது. இப்பொழுது ஆறுமாத கர்ப்பமாயிருக்கி றாய். சீக்கிரம் ஊருக்கு அழைத்துக்கொண்டு போகிறேன் என்று கூற, அவள் சுவாமி! இப்பொழுதே வந்துவிடுகிறேன் என, பெண்ணே! அவசரப்படாதே. எனக்குச் சமையந்தெரியுமென்றுகூறி விடைபெற்று க்கொண்டு இருப்பிடம் போய்ச்சேர்ந்தான். இப்படி யிருக்கையில் ஒரு நாள் சௌந்தரவல்லிக்குப் போஜனங் கொண்டுவருகிற பணிவிடைப் பெ ண்களிருவரில் ஒருத்தி மற்றவளைநோக்கிச் சுந்தரம்மா இந்த அதிசயங்கே ட்டாயா? என, அவள் இரத்தினம்மா! என்ன ஆச்சரியம் என? அவள் நீயும் என்கூடத் தினந்தோறும்வந்து கொண்டிருக்கிறாயே நமது இராஜகு மாரத்தி யென்ன நிலைமையிலிருக்கிறாளென்று கவனித்தாயா? என, அவள் ஆம் சுந்தரம்மா! நான் கவனித்தேன் அதற்கு நான் செய்யவேண்டுவதெ ன்ன என்றாள். நீ கவனித்து அறிந்தது என்ன? உனக்குத் தெரிந்திருந் தால் இப்படிச் சொல்லமாட்டாய் என்றாள். இரத்தினம்மா இல்லை இல்லை; எல்லாம் எனக்குத் தெரியும்; நீ கவனிக்கவில்லையென்று நினைத்து நான் சும்மா இருந்தேன் என்றாள். அப்படியானால் அது என்ன சொல்லென்று சுந்தரம்மாள் கேட்க, நமது இராஜகுமாரத்தி கர்ப்பவதியாயிருக்கிறாள் அது தானேயென்று கூற, அவள் ஆம்! ஆம்; நான் இரண்டுமாதமாக அறி வேன். இனி நாம் சும்மாவிருந்தால் இராஜ தண்டனைக்குள்ளாவோம்; ஆகையால் இன்று அரசியிடம் சொல்ல உத்தேசித்திருக்கிறேன். உன் கருத்தென்னவென, இரத்தினம்மாள் நியாயந்தான் தெரிவிப்பதே உத்தமம்

இல்லாவிட்டால் நமக்கு ஆபத்துவருமென்று பேசிக்கொண்டேபோய் இராஜகுமாரத்திக்குப் போஜனங்கொடுத்து அவளிடம் சற்றுநேரம்பேசிக் கொண்டிருந்து அவள் கவலையற்றிருப்பதையும், ஒருவரையும் மதியாத பெருந்தன்மையான குணத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டுச் சில குறி களால் அவள் கர்ப்பவதிதானென்று நிச்சயம் பண்ணிக்கொண்டு மீண்டு அரசியிடம்போய்ப் பணிந்து அம்மா! இன்று அதிசயங்கண்டு கூறவந் தோம்; உத்தரவானல் சொல்லுகிறோமென்றார்கள். அரசி அதென்ன சொல்லுங்கள் என, அவர்கள் அம்மா! இவ்வளவு பலமான கட்டுக்காவலி லிருக்கும்போதே தமது குமாரத்தி யெப்படியோ கர்ப்பவதியாயிருக்கிறாள். சிலநாளாய்ச் சந்தேகந்தோன்றி யின்று நிச்சயமாய் அறிந்துவந்து கூறி னோம். உமது சித்தம் எப்படியோ? கோபிக்கவேண்டாம். எங்களுக் குத் தோன்றினதைச் சொல்லிவிட்டோம். அப்புறம் உமது சித்தம். எங் கள்பேரில் பழியில்லையென்றார்கள். அரசி கேட்டுத் திடுக்கிட்டு, அதென்ன? அசம்பாவிதமான சங்கதி சொல்லுகிறீர்கள். காற்றுக்கூட நுழையாத கட்டிடத்துக்குள் யார் புகுந்திருப்பார்கள்? நான் நம்பவில்லையென, அவர் கள் நாங்களும் சந்தேகப்பட்டே யித்தனைநாள் சும்மாவிருந்தோம். எங் களுக்கும் இது மெத்த புதுமையாகவே யிருக்கிறது. இன்று சந்தேக மறத்தெளிந்து வந்துகூறினோம் என்று சொல்லிப் போய்விட்டார்கள். அரசி இதே கவலையாயிருந்து நம்பணிப்பெண்கள் நம்மிடம் அபவாதம் கற் பிப்பார்களோ? மாட்டார்கள். இதைத் தீரவிசாரிக்கவேண்டுமென்றிருக் கையில், அரசன் அந்தப்புரத்துக்குவந்து, அரசியைப்பார்த்துப் பெண்ணே! ஏது மனங்கலங்கியிருக்கிறாய்? சொல்லென, அவள் பணிப்பெண்கள் சொன்னதைக்கூறி வருத்தப்பட்டாள். அரசன் பெண்ணே! நான் நம்ப வில்லை. அந்த அறைக்குள் எவன் புகுவான்? பணிப்பெண்கள் முட்டாள் தனமாகக் கூறியிருப்பார்கள். அதைப்பற்றி நீ வருந்துவது நியாயமல்ல. ஆயினும் விசாரித்தறிவோம் என்றுகூறி, அரண்மனை மருத்துவப்பெண் களை யழைத்து, இச்சங்கதிகூறி இரகசியம்வெளிப்படாமல் போய் உண்மை அறிந்துவாருங்கள் என்று கட்டளையிட்டான். அவர்கள் அப் படியேபோய் இராஜகுமாரத்தியோடு சிறிதுநேரம் வார்த்தையாடிக் கொ ண்டிருந்து சங்கதி நிச்சயமென்று தெரிந்து அரசனிடம்போய்ப் பணிப் பெண்கள் சொன்னது வாஸ்தவந்தான்; பொய்யல்ல என்று சொல்லிப் போனார்கள். இதுகேட்ட அரசன் மஹாகோபமும் வருத்தமு மடைந்து அரசியைப்பார்த்துக் கேட்டாயா? பெண்ணே! இனி நாம் செய்வதெ ன்ன? நமக்குத் தீராத அபவாதம்வந்துவிட்டது. சந்திரசூரியருள்ளமட்

டும் இந்த அபவாதம் நம்வம்சத்தை வழிவழியாக அடிமைகொண்டிருக்கும். ஆகையால் நீ என்ன சொல்கிறாயென, அவள் சுவாமீ! நாம் நேரில் போய் ஒருதரம் பார்த்துச் செய்யவேண்டுமென்று சொல்ல, மறுநாட்காலையில் அரசனும், அரசியும் தம் புத்திரியைப்பார்க்கப் போவதுபோலப் போய்ப், புத்திரியை யழைத்துப் பார்த்து நிச்சயந்தெரிந்து கொண்டு குழந்தாய்? என்னகாரியம் பண்ணினாய். நடந்ததை ஒளியாமற் சொல்; நீ கர்ப்பவதியானதெப்படி? என, அவள் அப்பா! நான் ஒன்றும் அறியேன் தனிச்சிறையிலிருந்து தவிக்குமெனக்கு இந்தக்கொடுமையும் வேண்டுமோ ஒன்றுமில்லை யென்றாள். அரசன் மிகக் கோபங்கொண்டு ஒன்றும் பேசாமல் மனைவியோடு எழுந்திருந்துபோய் அரண்மனைசேர்ந்து, தன் மந்திரியை யழைத்து நடந்த சமாசாரத்தைத் தெரிவித்து இதற்கென்ன செய்யலாமென, வல்லவனாகிய மந்திரி சுவாமீ! அப்படியிருந்தால் அது தெய்வச்செயல்; அதற்காகத் தேவரீர் கோபங்கொள்ளாதிருக்கப் பிரார்த்திக்கிறேன். குழந்தையைச் சிறைவிடுத்து வீட்டுக்கு அழைத்துவருவதே தகுதியென, அரசன் சினந்து நீ எனக்காக அப்படிச் சொல்லுகிறாய்; அது முறைமையன்று. கேட்டோர் நகைப்பார்கள் அல்லவா? இதெல்லாந் தெய்வச்செயலென்று கூறலாமா? ஏதோபிசகு நடந்திருக்கிறது. அது மறைபடாது. ஆகையால் என் புத்திரியைக் கொலை செய்வதே இதற்குப் பிராயச்சித்தமாம். நான் அப்படியே செய்ய உத்தேசிக்கிறேன். அந்தக் கட்டளையை நீயே நேரிலிருந்து நிறைவேற்றிவரவேண்டும். இல்லாவிட்டால் உலகத்தில் அபக்கியாதி நிலைபெறுவதுந்தவிரச் சக்கிரவர்த்தி யறிந்தால், நாம் நமது பெண்ணை யவனுக்குக் கொடுக்கச் சம்மதியாமல் வேறொருவனுக்குக்கொடுத்து விட்டதாகநினைத்து படை யெடுத்து வந்து, நமது இராஜ்யத்தை நிர்மூலஞ்செய்து விடுவான். பல ஆபத்துக்கள் வரும். ஆகையால் என் கட்டளையை மறுக்காமல் நாளையதினம் நீயேபோய் அந்தத் துஷ்டையைக் கொலை செய்துவாவென, மந்திரி மீண்டும் வணங்கிச் சுவாமி! என் வார்த்தைக்குச் செவிகொடுக்கவேண்டுகிறேன். கொலைசெய்வது உசிதமல்ல. பெண்கொலை மஹாபாபம். இது கொலை செய்யத்தக்க குற்றமுமன்று. இப்படிப்பட்ட குற்றஞ்செய்த பெண்ணைக்கானகத்துக் கோட்டிவிடுவதே நீதி முறையாம். பூர்வமன்னரெல்லாம் அப்படியே செய்துவந்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. சாஸ்திரங்களும் அப்படியே யிருக்கின்றன. ஆகையால் ஒரு பெரிய பேழையிலிட்டுக் காட்டுக்குள் கொண்டுபோய் விட்டுவிட்டால் உண்மையில் பாவியாயிருந்தால் கரடி, புலிகட்கு இரையாய்ப்போகட்டும். இல்லாவிட்டால்

எங்கேனும் ஜீவிக்கட்டும் இதுவே நியாயமென்றுகூற, அரசன் அப்படியேசெய் தாமதியாதே. தச்சர்களைக் கூப்பிட்டுத் தகுந்த பெட்டிசெய்வித்து நாளை யிரவுவிடியுமுன் எங்கேனும் கொண்டுபோய் விட்டுவா? என்னை மீறிநடவாதே யென்று கண்டிப்பான உத்தரவுகொடுத்துவிட்டு அந்தப்புரம் போய்விட்டான். மந்திரி தச்சர்களைக் கூப்பிட்டுப் பெட்டிசெய்ய உத்தரவு செய்துவிட்டுத்தன் வீடுபோய் மனைவியோடு நடந்ததைச்சொல்லி விசாரப்பட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது அவ்வூர்ச் சேனாதிபதிக்கு வாழ்க்கைப்பட்டிருந்த மந்திரி புத்திரி யிதைக்கேட்டுத் திடுக்கிட்டு மனம் பதைத்து வருந்தினாள். ஏனென்றால் அவள் இராஜபுத்திரிக்கு உயிர்த்தோழி. அவள் உடனே அவ்விடம்விட்டெழுந்திருந்து தன் வீடுபோய்ச் சேர்ந்து, தன் நாயகனைப்பணிந்து பிராணநாதா! இராஜபுத்திரிக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து நேர்ந்தது. அவள் என்னுயிர்த்தோழியென்பது தேவரீர் அறிந்த விஷயம் அல்லவா? ஆகையால் அவளைப்பார்க்க விரும்புகிறேன். அவளுக்கு இந்தச் சமாசாரந் தெரிவித்தால் அவள் ஒருக்கால் தப்பித்துக்கொள்ளவுங்கூடும். ஏனெனில் இது தெய்வச்செயலாக இருப்பதால் அந்தப் புருஷனும் தெய்வத்தன்மையுடையவனாகவே யிருப்பான். அல்லவாவென்று கூறியிரந்துகேட்க, அவன் பெண்ணே! அரசன் அறிந்தால் நமக்கும் ஆபத்துவரும் ஆகையால் இரவில் ஊரடங்கினபிறகுநானுங் கூட வருகிறேன். இருவரும்போய் வருவோமென்றுகூற, அவள் இரவுக்கு எதிர்பார்த்திருந்து, அஸ்தமித்தபின் ஊரடங்கி நிச்சப்தமாயிருக்கும்போது தன் நாயகனோடு புறப்பட்டு ஒருவரும் அறியாமல் இராஜபுத்திரியிடம்வந்து, அவளைக் கூப்பிட்டுக் கலந்துபேசிக் கொண்டிருக்கையில், அம்மா சௌந்தரவல்லி நீ கர்ப்பவதியானாய், உன் தகப்பன் கோபித்துநாளை இரவுக்குள் உன்னைக் காட்டில் கொண்டுபோய்விடும்படி தீர்மானம் செய்திருக்கிறான். உன்னை வைத்துப் பூட்டிக்கொண்டுபோவதற்காக ஒரு பெட்டிதயாராகிறது. இந்தக் கட்டளையை என் தகப்பனே நிறைவேற்ற வேண்டுமாம். இது கேட்டதுமுதல் என் மனம் பதைக்கின்றது ஆவி சோர்கின்றது. ஐயோ என்ன செய்வேன்? நடந்த காரியமென்ன? என்று கேட்டாள்.

தேவதஞ்சரியம்மாள்

---

## லிம்பலேன்.

(7-வது அத்தியாயம். 19-வது பக்கத்தொடர்ச்சி.)

---

இப்படியிருக்க அந்தக் குகையின் வரலாற்றை இப்பொழுது எடுத்துரைப்போம். அந்தக் குகை வேல்ஸ் என்ற ஊரின் மலைகளுக்கு மத்தியில் அனந்தரமாயிருக்கிறது. அதில் வயது சென்ற ஒருவரும், இரண்டு

சௌந்தரியமுள்ள வாலிபர்களும் கொஞ்ச காலமாக வசித்துக்கொண்டிருக்கிறார்கள். பையன்களோ கோடிசூரியப் பிரகாசமுடைய மன்மதனைப் போல் காணப்படுகிறார்கள். அவர்களைப்பார்த்த மாத்திரத்தில், ஐயோ! இந்தக் குழந்தைகள் ஓர் பட்டணத்தில் நல்ல வம்சத்தில் பிறந்து மேன்மையான பதவியை யடைந்து ஆனந்தத்துடன் இருக்கக்கூடாதா, இப்படியா துஷ்ட ஜெந்துக்களுள்ள நடுக்காட்டில் ஒரு குகையில் வந்து வசிக்க வேணும் என்று மனதிரங்கும்படியாய் நேரிடும். ஆனால் பட்டணங்களிலுள்ள பிள்ளைகளைப்பார்க்கிலும் கல்வியில் அதிசத்தேர்ச்சியடைந்து, வில் வித்தை, வாள்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம் இவைகளை நன்றாய்க்கற்று தங்கள் காலங்களை ஒரு விசாரமன்னியில் இன்பமுடன் கழித்துக் கொண்டுவருகிறார்கள். இவர்கள் மூவரும் ஒருநாள் தங்கள் குகையின் முன்னின்றுகொண்டு பின்வருமாறு சம்பாஷிக்கிறார்கள் :—வயது சென்றவரின் பெயர் பேலாரியஸ், குழந்தைகளின் பெயர், கைடீரியஸ், ஆர்விராகஸ்.

பேலாரியஸ் :—ஆ! ஆ! நல்லகாற்று வீசுகிறது. நம்மைச் சுற்றிலும் பார்க்கிறபோது எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது. இந்த தினத்தில் வீட்டிலிருந்து காலத்தைக் கழிக்கிறதைப் பார்க்கிலும் வெளியிலே போய் வேட்டையாடிச் சந்தோஷமாயிருந்தால் எவ்வளவு குணமாயிருக்கும். மைந்தர்களே! பெரிய இடங்களிலுள்ள வீட்டின் வாசல்கள் அதிக உயரமாயும் அதிக அகலமாயுமிருக்கின்றதினால் அவைகளின் வழியாய்ப் போகிறவர்கள் தலைகுனியாமல் இறுமாப்புடன் போவார்கள். நம்முடைய குகையின் வாசலோ அதிகமாய்த் தாழ்ந்திருக்கிறது. ஆகையால் கடவுளுக்கும், சூரியனுக்கும் அதிகாலையில் வணங்கவேணுமென்றும், தெய்வத்தை மறக்கக்கூடாதென்றும், இந்தக் குகை தானாகவே கற்பிக்கிறது. இதை நீங்கள் ஒரு பாடமாகவைத்துக்கொண்டு தெய்வத்தை எப்பொழுதும் வணங்கி, சன்மார்க்கத்திலிறங்கி மோக்ஷத்தையடையவேணும். மறந்து போகாதேயுங்கள். இப்பொழுது தெய்வத்தை வணங்கி வெளியிலே போகலாம் வாருங்கள், சீக்கிரம் வாருங்கள்.

கைடீரியஸ், ஆர்விராகஸ் :—தலைகுனிந்து வெளியே போகிறார்கள்.

பேலாரியஸ் :—இப்பொழுது மலைகளில் வேட்டையாடப் போகிறேன். அதோ பாருங்கள், அந்த மலையின் உச்சியில் போகிறேன். நீங்களோ வாலிபர்கள், உங்களால் நடக்கமுடியாது. நான் இந்தப்பள்ளத்தாக்குகளைக்கடந்து மலையின் உச்சியில் போனவுடன் என்னை ஒரு காகத்தைப்போல் காண்பீர்கள். இதனால் நீங்கள் ஒன்று நன்றாக அறியலாம்

இப்பொழுது ஒரு பெரியமனிதனுகக்காணப்படுகிற நான் அந்த இடத்தை யடைந்தவுடன் ஒரு சிறு காகமாகக் காணப்படுவேன். ஆகையால், மைந்தர்களே! ஒருவனை பெரிய மனிதன் அல்லது அற்பமனிதன் என்று உலகத்தில் சொல்வது அவனுடைய இயற்கையாயுள்ள குணங்களினுலல்ல; ஆனுல் அவன் அடைந்திருக்கும் பதவியினுல் தானென்று அறிந்து கொள்ளுங்கள். யோக்கியதையில்லாத ஒரு அற்பன் நல்ல வம்சத்தில் பிறந்தால் அவனை பெரிய மனிதனென்று தோத்திரம் செய்வார்கள். நல்ல குணங்களையுடைய ஒருவன் இழிகுடியிற்பிறந்தால் அவனை ஒருவரும் மதிக்கமாட்டார்கள். நான் மலையின் உச்சியில்போனவுடன் அரண்மனைகளையும் சிற்றரசர்களையும், சண்டையிலுண்டான தந்திரங்களையும் பற்றி நான் உங்களுக்குச்சொன்ன கதைகளை நன்ருய் ஆலோசித்துப் பாருங்கள். ஒருவனிடத்தில் நாம் வேலைசெய்கிறதாயிருந்தால் நம்முடைய மனதுக்குத் திருப்தியாகச் செய்தால் மாத்திரம்போதாது; நம்முடைய எஜமானனுக்குத்திருப்தியாகச்செய்து அவன் சந்தோஷமடைந்தால் தான் நல்லவன் என்ற பெயரையடையலாம்; நமக்கு நல்ல லாபமும் கிடைக்கும். இதற்குத்திருஷ்டாந்தமாகப்பாருங்கள். கழுகுகள் தங்களுடைய பெரிய சிறகுகளைவிரித்துக்கொண்டு கண்ணுல் பார்க்கக் கூடாததூரம் போகின்றன. வண்டுகளோ கொஞ்சந்தூரம் தான் பறக்கின்றன. இவைகளில் வண்டல்லவோ அபாயமில்லாத ஸ்திதியிலிருக்கிறது. மேலும் தன்னுல் கூடிய சிரமமெடுத்து வேலைகளைச்செய்து கடைசியில் எஜமானன் அதன் யோக்கியதையை யறியாமல் அவனைப் பழிசொல்லுகிறதைப் பார்க்கிலும் நம்முடைய ஜீவகாலம் எவ்வளவோ பேரானந்தமுடையதா யிருக்கிறது. இது மாத்திரமல்ல, தையல் காரனிடத்தில் நல்ல உடைகளைவாங்கி யுடுத்திக்கொண்டு அதின் விலையைக்கொடாமல் அவனிடத்தில் இழிவான வார்த்தைகளையும் வசைச்சொல்லையும் கேட்டுக் காலத்தைக் கழிக்கிறதைப் பார்க்கிலும் நம்முடைய காலம் எவ்வளவு மேன்மையுடையதா யிருக்கிறது?

**கைடீரியஸ்:**—பிதா, நீங்கள் உலகப்பயிற்சியினுல் சொல்லுகிறீர்கள். கூட்டைவிட்டுப் போகாத குஞ்சுகளைப்போல இக்குகையை விட்டுப்போகாமல் சர்வகாலமும் இங்கே தவித்துக் கொண்டிருக்கிற நாங்கள் எவ்வித மறிவோம். இந்தக் குகையைவிட்டு வெளியே நடக்கிற சங்கதிகள் கொஞ்சமாகிலும் எங்களுக்குத் தெரியாதே. அரண்மனைகளில் கஷ்டதுன்பங்களை யனுபவித்துக் கொ

ண்டிருந்த உங்களுக்கு இந்த ஜீவகாலம் நல்லதென்று தோன்ற லாம். அமரிக்கையாயுள்ள ஜீவகாலம் நல்லதென்றால் நம்முடைய காலத்தைப்பார்க்கிலும் மேன்மையுடையது வேறே கிடையாது. வயது சென்றவர்களுக்கு இது நல்லதென்று தோன்றலாம். சிறுவர் களாகிய எங்களுக்கு, இருந்த இடத்தைவிட்டுப் போகக்கூடாமல் கஷ்டப்படுகிற ஒரு கைதி அடையப்பட்டிருக்கிற ஜெயிலைப்போலஇந் தக் குகை காணப்படுகிறது. ஒருவன் ஒருபொழுதும் வேறே யிடத் துக்குப்போகாமல் படுக்கையறையைச் சுற்றிக்கொண்டுவருகிறதினால் அவனுக்கு என்ன சந்தோஷமுண்டு. அதே மாதிரியாக நாங்கள் இங்கேயிருந்து துன்பப்படுகிறோம்.

**ஆர்விராகஸ்** :—பிதா ! உம்மைப்போல் எங்களுக்கும் வயதானால் எதைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். மழையும் காற்றும் நன்றாக அடி க்கும் காலங்களில் இந்தக்குகையிலிருந்து எங்களுடைய காலங்களைக் கழிக்க எதைப்பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் கண்ணால் ஒன்றும் பார்க்கவில்லை. மிருகங்களுக்குச் சமமாக விருக்கி றோம். இரைகளின்மேல் வேகத்துடன் செல்லுகிற நரிகளைப்போலும் ஓநாய்களைப்போலும், பராக்கிரமசாலியாயிருக்கிறோம். ஓடுகிற ஜெந் துக்களை பிடிப்பதில்தான் எங்களுடைய தைரியத்தைக் காட்டு வோம். சங்கீதத்தை வேறே இடத்தில் போய்க்கேட்கிறதற்கும் வழியில்லை. பக்ஷிகளைப்போல இந்தக் குகையில் நாங்களே பாடி நாங்களே கேட்டு ஆனந்தப்படவேண்டியிருக்கிறது. இப்படி எவ் வளவு நாளாகக் காலங்கழிக்கப்போகிறோமோ தெரியவில்லையே. காட் டில் மாத்திரம் இருந்தால் போதுமா. பட்டணங்களின் நடவடிக்கை களை யறியவேண்டாமா. இந்த இடத்தில் எங்கள் காலங்களைக் கழி த்தால் எங்களுக்கு என்ன சுகமுண்டு. ஆகையால் தயவு செய்து எங்களைப் பட்டணங்களுக்கு அழைத்துக்கொண்டுபோய் அதன் மகி மையை எங்களுக்குத் தெரிவிக்கவேணும்.

**பேலாரியஸ்** :—என்ன அறிவில்லாமல் பேசுகிறீர்கள். நீங்கள் ஊரிலுண்டா ன நடவடிக்கைகளைப்பார்த்து அதன் கஷ்டத்தை யனுபவித்தால்தான் உங்களுக்குத்தெரியும். அரண்மனையிலுண்டான கபடங்களுக்குட்ப டுகிறது எவ்வளவு கஷ்டமா யிருக்கிறதோ அதேமாதிரியாக அதிலி ருந்து தப்பிப் போகிறதும் கஷ்டமாயிருக்கும். அதன் உச்சியில் போனால் நிச்சயமாய்க் கீழேவிழுவோம், அல்லது அதைப்போல் அதிக அபாயமுள்ள ஸ்திதியிலிருப்போம், யுத்தங்களில் எவ்வளவு

கஷ்டத்தை யனுபவித்தாவது கீர்த்தியைப் பெறவேணுமென்று போகிறார்கள்; ஆனால் அவர்கள் அபாயத்தையடைகிறார்கள். கீர்த்தியடைய வேணுமென்று நல்ல காரியங்களைச் செய்தாலும் அவர்கள் இறக்கும்போது உலகத்தாரால் நிந்திக்கப்படுகிறார்கள். தவிர அனேக விஷயங்களில் நல்ல காரியங்களைச் செய்தவர்கள் பழிக்கப்படுகிறார்கள். அது மாத்திரமல்ல பழிச்சொல்லை விரோதஞ் சொல்லாமல் கேட்கும்படிக் சட்டாயப் படுத்துகிறார்கள். பிள்ளைகளே! நான் சொன்னவற்றை நீங்கள் என்னிடத்தில் தானே காணலாம். நான் ரோமன்ஜாதியாருக்கு விரோதமாய் அனேகந்தரம் சண்டைசெய்து அவர்கள் கத்திகளினால்பட்ட புண்ணின் தழும்புகளை இதோ என் உடம்பில் பாருங்கள். நான் கீர்த்திபெற்ற வீரர்களைப்பார்க்கிலும் அதிகக் கீர்த்திப்பெற்றவனா யிருந்தேன். ஸிம்பலீன் என்னும் அரசன் என்னை யதிகப் பிரியத்துடன் வைத்திருந்தான். வீரர்களைப்பற்றிப் பேசவேண்டி யிருந்தால் என்னைத்தான் முதலில் பேசுவான். நான் அப்பொழுது, நல்லகனிகளின் பாரத்தைத் தாங்கமாட்டாமல் வளைந்துகொண்டிருக்கிற கிளைகளையுடைய ஒரு மரத்தைப்போல உலகத்திலுள்ளவர்களுக்கும் ஸிம்பலீனுக்கும் காணப்பட்டேன். ஐயோ! ஒருநாள் இராத்திரி புசல் காற்றோ அல்லது தீவட்டிக்கொள்ளைக் கராரோவந்து என்னுடைய பழங்களை உதிர்த்துவிட்டார்கள். அது மாத்திரமல்ல, என்னுடைய இலைகளையும் உதிர்த்து மொட்டைமரமாக்கிக் கடுங்காற்றில் நிறுத்திவிட்டார்கள். என்னுடைய அதிர்ஷ்டம் அத்தோடு முடிந்துவிட்டது. பிறகு இக்கதியை யடைந்தேன்.

வி கோபாலஐயங்கார் பி.எ.

---

## ஒரு விவாகமகோற்சவம்.

---

ராவு பகதூர் எம். எதிராஜுலு பிள்ளையவர்களுடைய "ஸ்வீட் ஹோம்" என்னும் கிரஹத்தில் நடந்த விவாஹ மஹோற்சவத்தைப்பற்றி ஒரு நிருபர் எழுதி நமக்கனுப்பியதை இங்கு பிரசுரிக்கிறோம் :—

கிழக்கு சமுத்திரக்கரையோரமான மாகாணங்களிலும் ஜில்லாக்களிலும் தமது நற்குண நற்செய்கைகளால் மஹா கீர்த்திப்பிரதாபத்தைப் பெற்ற உத்தமசீலப்பிரபுவாகிய மிஸ்டர் ராவு பகதூர் எதிராஜுலு பிள்ளையவர்களுடைய ராயப்பேட்டை மோபிரே வீதியில் அமைக்கப்பட்ட "ஸ்வீட்ஹோம்" என்னும் நாமம் சூட்டப்பட்டுள்ள அரண்மனையில் சென்ற சிலநாளாகப் பிள்ளை யவர்களுடைய அநேக சிநேகிதர்கள் வெகுகாலமாய் எதிர்பார்த்திருந்த வண்ணம் அவருடைய சிரேஷ்ட

புத்திரன் சிரஞ்சீவி ம. எ. கஜபதிராவு பிள்ளையவர்களுக்கும் கனம்பொருந்திய திருவேங்கிடம்பிள்ளை யவர்களுடைய கனிஷ்ட புத்திரி தேவகி அம்மாளுக்கும் நடந்தேறின விவாஹ சம்பந்தமாய் உற்சவங்கள் கொண்டாடப்பட்டன. பெண்ணுக்கும் பிள்ளைக்கும் அளிக்கப்பட்ட விலை எறப்பெற்றவைகளும் ஏராளமானவைகளுமான பரிசுகளும், சென்ற மே மாதம் 22-ந்தேதி புதன்கிழமை காலையில் நடந்த முகூர்த்தத்தில் வெளிதேசங்களிலிருந்து பிள்ளையவர்களுடைய அருமை பெருமையான சிநேகிதரில் சிலரும், சென்னை நகரிலுள்ள அவருடைய பேர்போன இஷ்டர்களில் அநேகரும், விவாஹத்திற்கு வந்திருந்து சிறப்பித்ததும், பிள்ளையவர்கள் அடைந்திருந்த பேர்போன கீர்த்திப் பிரதாபத்தை வெளிப்படுத்துவதற்குப் போதுமான அத்தாக்ஷியாயிருந்தன.

சென்ற ஒரு மாதக்காலமாக கட்டடங்களெல்லாம் வெள்ளையடிக்கப்பட்டு அழகான தோட்டங்களெல்லாம் சுத்திகரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டன. அவைகள் இப்போதுபார்வைக்கு மிகவும் அலங்காரமாய்க் காணப்படுகின்றன. கிரஹத்தின் விசாலமான உள் முற்றத்தில் அன்று சாயரக்ஷை பாட்டுக்கச்சேரிக்கு வரும் இஷ்டர்கள் உட்காருவதற்கு கவர்களுள்ள தொங்கு விளக்குகள் வரிசை வரிசையாய்ப் போடப்பட்டு வெகு உன்னதமாய் அலங்கரிக்கப்பட்டதும் ரேக்குத்தொங்கல்கள் வெண்ணிறமான மஸ்லின் துணியால் மூடப்பட்டும் மேற்கூரையிலிருந்து தொங்கின மாதிரியாய் 300 பேர் வீற்றிருக்கக்கூடிய பெரிய பந்தலொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதற்கு அருகாமையான இன்னொரு முற்றத்தில் சித்திரவேலைக்காரர்களால் தங்கள் யுத்தியை யெல்லாம் பிரயோகித்து சித்திரந்தீர்ந்த மணவரையொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதில் ஓர்பாகம் முகூர்த்தசடங்குக்கும் வந்திருந்த நாயகிமாரை மறைக்கும்படி ஜப்பான் திரைகள் போடப்பட்டிருந்தன. முகூர்த்த சம்பந்தமான ஆரம்பசடங்குகள் அதிகாலையில் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பதுமணிக்கு முடிவாகி அப்புறம் முக்கியமான சடங்குகள் துவக்கப்பட்டன. அங்கு வந்தவர்களில் ஆனரெபில் சர், வெ. பாஷியம் அய்யங்கார் அவர்கள், Kt. C. I. E., ராஜா சர், சவலை ராமசாமிமுதலியாரவர்கள், Kt. C. I. E., திவான் பகதூர் எஸ் ராகவாசாரியார், ராய்பகதூர் எம். வ. சிங்கராசாரியார், எம். வீரராகவசாரியார், ராய்பஹதூர் பட்டாபிராம அய்யர், கிஷ்ணராவு முதலான கனவான்களையும் கவனித்தேன்.

சென்னையிலுள்ள அன்னதான சமாஜங்களில் ஏழைகளுக்கு மூன்று நாள் போஜனங் கொடுக்கும்படி உத்தரவு செய்யப்பட்டது. பெஜ்வாடாவிலுள்ள நூற்றுக்கணக்கான ஏழைகளுக்கு அன்ன வஸ்திரங் கொடுக்கவும் அங்குள்ள ஆலயங்களுக்கு அர்ச்சனைகள் செய்யவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன,

## NEWS & NOTES.

**கூச்பேகார் மகாராணி :—** *தம்முடைய குழந்தைகள் கல்விபயில வேண்டியிருந்தலினாலும் அதனாற்றுனே தாம் தமது குழந்தைகளுடனிருக்கவேண்டுவது அவசியமா*

யிருத்தலினாலும் கூச்பேகார் மகாராணியவர்கள் தமது மக்களுடன் இங்கிலண்டுக்கு இன்னும் சிலகாலத்துக்குள் செல்வார்கள்.

**மிஸ்டர் கிளாட்ஸ்டன் சரித்திரம்:**—மிஸ்டர் ஜான் மார்லியென்ற பெரியவரால் எழுதப்பட்டு வரும் மிஸ்டர் கிளாட்ஸ்டனின் திவ்விய சரித்திரம், அடுத்த மழை காலத்திற்குள்ளாகப் பிரசுரிப்பதற்குத் தயாராகு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. அமெரிக்கா பதிப்பு இரண்டு புத்தகங்களாகவும், பிரிடிஷார் பதிப்பு மூன்று புத்தகங் களாகவும் இருக்கும் என்று அறிகிறோம்.

**தேக சௌக்கியத்தைப்பற்றி உபந்நியாசம்:**—மிஸ் டிகான்ட்ஸோ என்னும் அம்மாள் பக்கிங்காம் ஹோடல் ஹாலில் மெல்லிய தேகத்தையுடைய குழந்தைகளை வைத்து வளர்ப்பதைப்பற்றியும்பாலாரிஷ்டவியாதிகளைப்பற்றியும் உபந்நியசித்து தக்க போஷணையில்லாமலே குழந்தைகள் வியாதியால் வருந்துகின்றன வென்றும் நீவ்ஸ் பூட் (Neavs food) என்னு மாகாரங் குழந்தைகளுக்கு வெகுநல்லதென்றும் சொன்னார்.

**பெண்கல்விப் பெருமை:**—மைசூர் மகாராணி காலேஜில் வாசித்த இரண்டு பிராமணப் பெண்மணிகள் நடந்த எப். ஏ. (F.A.) பரீக்ஷையில் தேறினார்களென்றும், அவர்கள் அப்படிதேறினதாக ஏற்பட்ட தேதி முதலாக மாதம் 1-க்கு 150-ரூபாய் வீதம் சம்பளம் ஏற்பட்டதென்றும், கீழ் வகுப்புகளில் அவர்களை உபாத்திச்சிகளாக இருந்து பிரதிதினம் பிற்பகலில் பி.ஏ B.A.) வகுப்பில் படித்துவருவார்களென்று மைசூர் ஸ்டாண்டர்டு கூறுகிறதைக்கேட்க நாம்மிகசந்தோஷப்படுகிறோம், ஈசனிவர்களுக்கு தீர்க்காயுளளிப்பாராக.

**ஆஸ்டிரியா தேசத்துச் சக்கிரவர்த்தி:**—தற்போது ஆஸ்டிரியாவில் சக்கிரவர்த்தியா யிருப்பவர் வருஷத்துக் கொருமுறை 12 தரித்திரர்களுக்குத் தமது கையால் அன்னம் பரிமாரி அவர்களது கால்களைக் கழுவும்உற்சவம் கொண்டாடும் வழக்கப்படியே இவ்வருஷமும் 700 கனவான்கள் நிறைந்திருந்த ஒரு பெரிய ராஜசபையிலே அவர் ஆகாரத் தட்டுகளைத் தரித்திரர் முன்வைத்து மூன்றுதரம் ஆகாரம் பரிமாறி அவர்கள் புசித்தாய் பின்னர் அன்னார் பாதங்களைக் கழுவிப் பிற்பாடு அவர்கள் ஒவ்வொருவர் கழுத்திலும் முப்பது வெள்ளிநாணயங்கள் சொண்ட பையொன்றையும் கட்டினார். அவ்விராஜ குடும்பத்துச் சிம்மாசன பதிகளுக்கு இன்றியமையாததாக ஏற்பட்ட கடமைகளிலிதொன்றாம்.

சீனு தேசத்திற்கு தென் கிழக்கில் சூலு என்ற ஒரு தீவு யிருக்கின்றது. இது ஸ்பெயின் தேசத்துக்குச்சொந்தம். இதுவெகு உஷ்ணபூமி. ஏனெனில் இது சம ரேகை (Equator) க்கு கொஞ்சம் வடக்கிலிருப்பதால் தான். பலவர்ணமுள்ள கிளிகள், இன்னும் பல விநோதமான பட்சிகளிங்கிருக்கின்றன. இங்கு கடலில் முத்துகள் விசேஷமாக அகப்படுகின்றன. இங்குள்ளவர்கள் ஜலத்தில் சுமார் 50 அடி ஆழத்தில்முழுகி முத்து சிப்பிகளைக்கொண்டுவருவதில் சாமர்த்தியமுள்ளவர்கள். தேங்காய் அபரிமிதமாகபயிரிடப்படுகின்றன; தவிர பழங்களும் அதிகமாக விருக்கின்றன. 10 வயதுள்ள குழைந்தைகள் துணிகளை தரிப்பது கிடையாதாம். ஜலத்தில் முழுகுவதும் நீந்துவதுமே இவர்கள செய்யும்வேலையாம். இவர்களுக்கு பத்து பன்னிரண்டு வயதாய் விட்டால் மற்ற ஜனங்களைப்போல உடைகளை தரித்துக்கொள்வார்களாம்.

**கொசுவும் ஆமணக்குச் செடியும்:**—சிற்றாமணக்குச் செடிகள் பயிரிடப்படும் இடங்களில் கொசுகு அண்டாதென்று சொல்லப்படுகிறது. படுக்குமிடங்களில் சிற்றாமணக்கு இலைகளைக்கொண்டு புகைபோட்டாலும் அல்லது அவைகளைப் பக்கத்தில் சற்றுநேரம் வைத்திருந்தாலும் கொசுகுகள் அந்த இலைகளின் கீழ்ப்புறத்திலுள்ள ஒரு

வித விஷமான சாரத்தால் இறந்துபோகின்றனவாம். தென்னிந்தியாவில் இந்தச் செடிகள் வெகு சாதாரணமாயிருக்கையில், இந்தச் சிகிச்சையைச் செய்து ஜனங்கள் ஏன் கொசுகுகளை அழிக்கிற தில்லையோவென்று அன்னியர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். சிற்றாமணக்குச் செடிகளை மண் தொட்டியில் பயிர் செய்து இரண்டு மூன்று தினங்களுக்கொரு முறை படுக்கு மிடத்தில் கொண்டுவைக்கலாம். இந்தச்செடிகளுக்கு வெயில் அவசியமாகையால், சிறிது நேரந்தான் நிழலில் வைக்கப்படவேண்டும். சாதாரணமாய்ச்செடிகளும் மரங்களும் அடர்ந்த இடங்களில் அவைகளின் ஈரத்துக்காகவும் நிழலுக்காகவும் கொசுகுகள்சேருகிறபடியால், வாசஸ்தலங்களுக்குச் சமீபத்தில் அதிகமாகச் செடிகளும் மரங்களும் அடரவிடாமலிருத்தல் நலம்.

---

விக்டோரியா சக்கிரவர்த்தினியைப்பற்றின ஓர்கதை:—மிஸ்டர் டானல்ட் நிகல் என்பவர் சிலகாலம் லண்டனில் ஷெரிப்பாக(Sheriff) இருந்துஇறந்துபோனார். இவர் பாலியமாயிருக்கையில் சக்கிரவர்த்தினி யவர்களின் கென்ஸிங்டன்மாளிகையின் பக்கங்களிலுள்ள சந்துகளில் வேலியில் தானாயுண்டாகும் ஓர்வித நாவல்பழங்களைத் தமது குல்லாவில் பொறுக்கிப் போட்டுக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் விக்டோரியா கோமகளும் சிறுபிராயமுள்ளவர்களாகி, ஒரு கோவேறு கழுதைமீது அந்தப்பக்கம் சவாரி வந்தார்கள். மிஸ்டர் நிகல் பொறுக்கிக் கொண்டிருக்கும் பழங்களைப் பார்த்து, எனக்குக் "கொஞ்சம் கொடு" என்று குழந்தைகேட்க, அவர் இன்னாரென்று தெரியாதிருந்தும், ஸ்திரீக்குக் காட்டவேண்டிய மரியாதையைப் பற்றித் தமது குல்லாவை அப்படியே காட்டினர். விக்டோரியாவும் கைநிறையப்பழத்தை ஆசையோடு எடுக்கையில், ஒருவேலைக்காரன் பரபரப்பாய் வந்து பழத்தை தன்கையில் வாங்கிக்கொண்டு கழுதையை விரட்டினான். விரட்டுவதற்கு முன்னால், மிஸ்டர் நிகலைப்பார்த்து, "விக்டோரியா கோமகளிடம்நீ பேசத்துணிந்தது உனமேல் பெரும்பிசகு," என்றான். வெகுகாலத்துக்குப்பின், மிஸ்டர் நிகல் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிட்டு மகாராணியவர்களுக்கெழுத, மகாராணியவர்கள் அன்புடன் தமது காரியதரிசி மூலமாக அனுப்பினவிடையில், "தமக்கு அது ஞாபகத்திலிருக்கின்றதென்றும், முகமறியாதபையனிடத்தில் தாம் பேசினதற்காகத் தமது தாயார் அதிகமாகக் கடிந்து கொண்டன ரென்றும், அக்காலம் முதல் நாவல்பழத்தைத் தான் புசித்ததேயில்லை யென்றும், ஆனால் மிஸ்டர் நிகல் கடிதத்தைக் கண்ட பிறகு, தமது ஜனங்களுக்கு அதிப்பிரியமான இந்தக் காட்டுப் பழத்தை ருசிபார்க்கத் தமக்கு விருப்பம் வருகிறது" என்றும் சொல்லியருளினார்கள்.

---

நமது பத்திரிகைக்கு வழக்கம் போல் காலணா ஸ்டாம்பு ஒட்டிவைத்து அனுப்பலாமென போஸ்ட் மாஸ்டர் ஜனரலவர்களிடமிருந்து உத்தரவு வந்திருக்கின்றது. இப்படி போஸ்ட்மாஸ்டர் ஜனரலவர்கள் அனுகூலஞ்செய்தது அவருடைய பெருந்தன்மையையும், பத்திரிகைகளிடத்திலுள்ள அபிமானத்தையும் காட்டுகின்றதல்லவா? நமது பத்திரிகைக்கு எவ்வளவோ இடையூறுகள் தோன்றி உடனே மறைந்துபோகின்றன. இனியாதொரு இடையூறும் நமதுபத்திரிகைக்கு வராதென நம்புகின்றோம். இப்பொழுது பத்திரிகை தாமதமாக பிரசுரிக்கப்பட்டு வருவதைப்பற்றி நாம் மிகவும் விசனப்படுகிறோம். நமது கைபொப்பக்காரர்களும் தயவு செய்து தங்கள் சந்தாவை தாமதமின்றி அனுப்பி வரின் நமது பத்திரிகையை கிரமமாக பிரசுரிக்கமுடியும். இப்பெரும் உதவியை நமது கையொப்ப நேயர்கள் செய்வார்களென்பதற்குச்சந்தேகமில்லை. நமது பத்திரிகைக்கு அதிகபக்கம் அடுத்த வருடம் மார்ச்சு மீ முதற்கொண்டு சேர்க்கவும் உத்தேசித்திருக்கிறோம். இப்படிச்செய்வது தான் உத்தமமென நமது கையொப்ப நேயர்களின் பெரும்பான்மையோர் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனது பற்றி நமது கையொப்ப நேயர்கள் இதன் விருத்தியைக்குறித்து தங்களாலியன்றமட்டும் இதற்கு சந்தாதாரர்களைச்சேர்க்க முயன்று நமது பத்திரிகையை உன்னதப்பதவியில்வைத்து ஆதரிப்பார்களென நம்புகின்றோம்.

C. S. R. Ed.